www.padippakam.com



# களம் பல கண்ட யாழ் கோட்டை

## பகுதி: இரண்டு

## றைக்ளோப் வன் ஹூன்ஸ்

நீலவண்ணன்

கோட்டையின் தென்கிழக்குப் பகுதியில் இந்தத் தேவாலயம் அமைந்திருந்தது. இதன் பிரதான வாயில் மேற்குப் பக்கத்தில் அமைந்திருந்தது. வடக்கு வாயில் ஊடாகவும், தெற்கு வாயில் ஊடாகவும் ஆலயத்தினுள் பிரவேசிக்க முடியும். தேவாலயத்தினுள்ளே 1660 ஆம் ஆண்டுக்குரிய கல்லறைக் கற்களைக் காணலாம். ஆனால் பிரதான வாயிலில் இந்த ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது 1706-ம் ஆண்டு எனக் குறிக்கப்பட்டுள்ளது. இந்தத் தேவாலயம் அடெம் வன்டேர்டுயின் (Adam Van Der Duyn) என்ற கம்மாந்தர் காலத்தில், மார்டின் லுயிஸ்கம் (Martin Leusekam) என்ற கட்டடக் கலைஞரால் கட்டி முடிக்கப்பட்டது. இத் தேவாலயம் இருபாலையில் இதற்கென அரிவிக்கப்பட்ட செங்கற்களையும் பயன்படுத்தியது. இச் செங்கற்களுக்கு ஆயிரத்துக்கு மூன்றரைப் பணம் கொடுக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத் தக்கது.

தேவாலயத்தில் இரு பாரிய மணிகள் பொருத்தப்பட்டிருந்தன. அவை போர்த்துக்கேயர் காலத்தவை என்பது அவற்றில் பொறிக்கப்பட்டிருக்கும் 'N.S. Dos Milagres De Jaffnapatao 1648' என்ற எழுத்துக்கள் சான்று பகருகின்றன.

ஒல்லாந்தரால் அமைக்கப்பட்ட அற்புதமான யாழ்ப்பாணக் கோட்டை வாயிலில், ஒல்லாந்தர் கம்பனியைக் குறிக்கும் 'VOC' என்ற எழுத்தோடு கூடிய யாழ்ப்பாணக் கம்மந்தோரின் ஆள் புலத்திற்குரிய கேடயச் சின்னம் (Shield) பொருத்தப்பட்டிருந்தது. அந்தக் கேடயச் சின்னத்தில் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் கற்பக தருவான பனை மரம் வரையப்பட்டிருந்தது. இது இந்த ஆள் புலத்தின் சரியான குறியீடாக விளங்குவதை, பதினேழாம் நூற்றாண்டில் இந்த மண்ணில் கால்பதித்து நிலை கொண்ட ஒல்லாந்தர் உணர்ந்திருந்தனர்.

### 5

### 21, ஜூன் 1658.

ஒல்லாந்தத் தளபதி றைக்ளோப் வன் ஹூன்ஸ் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது அவனுக்கு வயது 39 ஆகும். 1619 ஆம் ஆண்டு பிறந்த றைக்ளோப் வன் ஹூன்ஸ் டச் கம்பனியில் உயர் பதவிகளை வகித்துள்ளான். கம்பீரமான நெடிய உருவத்தைக் கொண்டவன்; சிறந்த போர் வீரன். அவனை அவனது சகாக்கள் 'உயரமான கப்ரின்' எனவும், யாழ்ப்பாணச் சுதேசிகள் 'பெரிய ஒல்லாந்தேசு' எனவும் அழைத்துள்ளனர். 1662 ஆம் ஆண்டு இலங்கை முழுவதற்குமான கவர்னராக நியமிக்கப்படும் வரை, யாழ்ப்பாணப் பட்டினக் கோட்டையின் கம்மாந்தராக விளங்கியுள்ளான். இடையில் சில வருடங்கள் பத்தேயாவில் இருந்துவிட்டுத் திரும்பி இலங்கைக்கு வந்து 1675 வரை கவனராகக் கடமையாற்றினான். பின்னர் தனது மகனிடம் பதவியைக் கையளித்து விட்டு பத்தேவியாவிற்குத் திரும்பினான்.

றைக்ளோப் வன் ஹூன்சினிடமிருந்து யாழ்ப்பாணக் கமாண்டரியின் ஆட்சிப் பொறுப்பை 1662 இல் லோறன்ஸ் பைல் (Laurens Pyl) என்பவன் ஏற்றான். றைக்ளோப் வன் ஹூன்ஸ் வகுத்த திட்டப்படி யாழ்ப்பாணக் கோட்டையை முழுமைப்படுத்தியதில் பைலிற்குப் பெரும் பங்குள்ளது. கண்டி மன்னனால் 1660 ஏப்பிரல் 4 ஆம் திகதி கைதாகிய றொபோட் நொக்ஸ் என்பவன் 19 வருடங்கள் சிறையில் வாடி, 1679 ஒக்டோபர் 18 ஆம் திகதி தப்பியோடி, காடுகள் கிராமங்களுடாக அரிப்பு எனுமிடத்தை வந்தடைந்து, ஒல்லாந்தரிடம் அடைக்கலம் புகுந்தான். அப் பரிதாபத்திற்குரிய றொபோட் நொக்சை கொழும்புக்கு அழைத்துச் சென்று பத்தேவியாவிற்கு அனுப்பிவைத்தவன் லோறன்ஸ் பைல் ஆவான்.

ஒல்லாந்தர் காலத்தில் அடிக்கடி யாழ்ப்பாணக் கோட்டைக்கு ஊழியம் (இராச்சியம்) செய்வதற்கு யாழ்ப்பாண மக்கள் சென்று வந்தனர். கோட்டையின் பொக்கிஷக்காரனுக்கு வரிகளாகச் சேர்கின்ற செப்புக் காசுகளை எண்ணுவதற்கு, கடைகளில் இருக்கும் சோனகர் சென்று வந்தனர். இவர்களோடு கடைகளில் வியாபாரம் செய்யும் செட்டிகளும் பரவர்களும் கோட்டைப் பொக்கிஷக்காரனுக்கு காசெண்ணுவதற்கு உதவி வந்தனர். சிவியார் என்போர் சம்மாந்தர், உயர் அதிகாரிகளின் பல்லக்குக் காவிகளாகவும், கோட்டை வீடுகளுக்கும், பறங்கித் தெரு, (சீதாரி - Pettah) வீடுகளுக்கும் நல்ல தண்ணீர் அள்ளி வழங்கும் ஊழியத்தையும் செய்து வந்தனர். பள்ளிவிலிகள் என்போர் கோட்டைக்குள்ளிருந்த கோயிலையும், வீடுகளையும் சுத்தி செய்து வெள்ளையடிக்கவும் கடமைப்பட்டிருந்தனர். பள்ளர் என்போர் மாதமொருதடவை ஒல்லாந்தக் கம்பனி யானைகளுக்கு தென்னையோலை கொண்டுவந்து கோட்டைக்குள் சேர்த்தனர் அத்தோடு வலிகாமம் பிரிவிலுள்ள பள்ளர் என்போர், மாதத்தில் 3 முதல் 6 நாள் வரை கோட்டைக்குள் வந்து திரிகைகளில் வெடிமருந்துகளை அரைத்துக் கொடுக்க வோண்டியவர்களாகவும் இருந்துள்ளனர். குதிரைகளுக்குப் புல் வழங்கும் கடமையும் இவர்களுடையதாக இருந்தது. சாண்டார் என்போர் கம்மாந்தர் கோட்டையிலிருந்து வெளியே புறப்படும்போது சாமான்களைச் சுமப்பவர்களாகவும், தீப்பந்தம் பிடிப்பவராகவும் விளங்கினர். வெற்றிலைக்காரர் என்போர் கோட்டைக் கம்மாந்தருடைய அடுக்களைக்கு முயல் வேட்டையாடிக் கொண்டுவந்து கொடுக்கும் ஊழியம் செய்தனர். கோட்டையில் வெள்ளாளரும், மடப்பள்ளியாரும், கம்மாந்தருடைய கணக்குப் பிள்ளைகளாக இருந்துள்ளனர். அரச ஊழியம் செய்யாது தவிர்க்கப்பட்டவர்கள் மாதம் தோறும் ஐந்து கூடை ஊமற்கரி சுட்டு ஒல்லாந்தக் கம்பனியின் கம்மாலைகளுக்கு வழங்க வேண்டியவர்களாக இருந்தனர்.

ஒல்லாந்தரின் யாழ்ப்பாணக் கோட்டைக்குள் சர்வசாதாரணமாகச் சென்று வரக்கூடிய உரிமை வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலை (வண்ணை வைத்தீசுவரன் கோயில்) நிர்மாணித்த வைத்திலிங்கச் செட்டியாருக்கு இருந்தது. 1751 ஆம் ஆண்டு வைத்திலிங்கச் செட்டியாருக்கு வயது நான்கு. அழகும் கண்டோரைக் கவரும் கவர்ச்சியும் அவரிடமிருந்தன. தனது தந்தையார் கோபாலச் செட்டியாரின் கடையில் இருந்தவேளை, அங்கு கடைத் தெருவுக்கு வந்த கோட்டைக் கம்மாந்தரின் மனைவி அவரைக் கண்டு விருப்புற்று தன் வளர்ப்புப் பிள்ளையாகத் தத்தெடுத்துக்கொள்ள நேர்ந்தது. பதினெட்டு வயது வரை வைத்திலிங்கச் செட்டியார் கோட்டையில் கம்மாந்தரின் மாளிகையிலும், தனது பெற்ற தந்தையார் வீட்டிலும் மாறி மாறி வாழ்ந்துள்ளார். தமிழிலும் ஒல்லாந்த மொழியிலும் அவருக்கு நல்ல தேர்ச்சி இருந்தது.



ஒல்லாந்தரின் 'யாழ்ப்பாணக் கொமாண்டரி'க்குரிய சின்னம்.

வெளிநாட்டுப் பயணிகள் பலர் யாழ்ப்பாணக் கோட்டைக்குப் பயணிகளாக வந்துள்ளனர். 1710 ஆம் ஆண்டளவில் ஸ்ரெயிகர் (Steiger) என்பவரும், 1744 ஆம் ஆண்டளவில் ஹெயிட் (Hegdi) என்பவரும், 1726 ஆம் ஆண்டளவில் வலன்ரைன் (Valertyn) என்பவரும் கோட்டையைப் பார்வையிட்டு, விபரமாக எழுதியுள்ளதுடன் அக் காலக் கோட்டை பற்றிய ஓவியப் படங்களையும் வரைந்து தந்துள்ளனர். இவர்களது குறிப்புக்களில் இருந்து அக் காலக் கோட்டையின் நிலமைகளை அறிய முடிகின்றது.

கோட்டைக்குள் இருந்த தேவாலயத்தில் இரு மணிகள் பிணைக்கப்பட்டிருந்தன. தேவாலயத்தின் உச்சியில் பிணைக்கப்பட்டிருந்த பெரியாலய மணி ஒலித்து, நகரத்தில் குடியிருந்த பறங்கிகளை ஆராதனைக்கு வருமாறு அழைக்கும். பறங்கித் தெருவில் வாழ்ந்த சீமாட்டிகள் கதிரைப் பல்லக்குகளில் அமர்ந்து, பல்லக்குக் காவிகளால் தூக்கி வரப்படுவர். கதிரைப் பல்லக்குகளின் தாங்கு கம்பிகளில் தோள் பதித்து யாழ்ப்பாணத்து அடிமைகள் காவிவந்தனர். தேவாலயத்தில் சீமாட்டிகளை ஆராதனைக்கு இறக்கிவிட்டு வழிபாடு முடியும் வரை வெளியில் கைகட்டிக் காத்திருந்தனர். தேவாலயத்தில் பொருத்தப்பட்டிருந்த சிறிய காண்டா மணி ஒலித்து கோட்டைக்குள் குடியிருந்த அதிகாரிகளையும்; படை வீரர்களையும் வழிபாட்டிற்கு அழைக்கும்.

கோட்டைக்குள் இருந்த சிலுவை வடிவத் தேவாலயத்தின் சுவர்கள் நான்கு அல்லது ஐந்து அடிகள் தடிப்பானவை. தரையில் 2 அடிச் சதுரப் பொழிகற்கள் அற்புதமாகப் பதிக்கப்பட்டிருந்தன. பொதுவாக ஒல்லாந்தரின் கட்டடங்களில் இத்தகைய நில நேர்த்தியைக்காண முடியும். மேலும் தூண்கள், வளைவுகள், கதவுகளின் சுற்று நிலைகள் என்பன மஞ்சள் நிறமான மெல்லிய செங்கற்களால் அழகு படுத்தப்பட்டிருந்தன. இவை இறக்குமதி செய்யப்பட்ட செங்கற்களாக இருக்க வேண்டும்.

கோட்டைத் தேவாலயத்தின் தென் பக்கப் பகுதியில், வேலைப்பாடு நிறைந்த சில நினைவுக் கற்பொழிவுகள் காணப்பட்டன. அவற்றில் ஒன்று 1769 இல் இக் கோட்டையின் ஒல்லாந்தக் கம்மாந்தரான பிரெடெரிக் வில்கெம் என்பவனுடையதாகும். தரையில் அவனுடையதும், வேறு பலரினதும் கல்லறைக் கற்கள் காணப்பட்டன. அவற்றில் சில 1666 ஆம் ஆண்டிற்குரியன.

### 4 நவம்பர் 1679

கோட்டையின் கம்மாந்தர் தனது குதிரையில் ஏறி கோட்டைக்கு வெளியே உலாச் சென்றிருந்தான். அவனுக்கு முன்னும் பின்னும் அடிமைகளும் வீரர்களும் நடந்து சென்றனர். ஒல்லாந்தச் சீமாட்டிகள் இருவர் கதிரைகளில் அமர்ந்திருக்க, அவற்றோடு பல்லக்கமைப்பில் பொருத்தப்பட்டிருந்த தாங்கு கொம்புகளில் தோள்பதித்து யாழ்ப்பாணத்து அடிமைகள் காவி வந்தனர். அவர்கள் சீதாரியில் (பறங்கித் தெரு) இருந்து கோட்டைத் தேவாலயத்திற்கு வழிபாட்டிற்காகச் சென்று கொண்டிருந்தார்கள்.

பிற்பகல் 3 மணி இருக்கும். திடீரென காற்று சற்று அடங்கி, பின்னர் விர்ரெனக் கிளம்பியது. எதிர்பாராத விதமாகப் பலத்த காற்று, சூறாவளியாக உருவெடுத்தது. ஆம் யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பெரும் சூறாவளி ஒன்று தாக்கியது. முற்றவெளியில் குடைந்து, சுழன்று வீசியடித்த காற்றுக்கு ஈடு கொடுக்க முடியாமல், கதிரைப் பல்லக்குகள் இரண்டும் தூக்கியெறியப்பட்டன. ஒல்லாந்தச் சீமாட்டிகள் இருவரும் அலமலக்காகச் சரிந்து விழுந்தனர். குதிரைகளில் பவனிவந்த கோட்டைக் கம்மாந்தர் நிலத்தில் தள்ளப்பட்டு குப்புற விழுந்தான். அடிமைகள் நிலத்தோடு படுத்துக் கொண்டனர் சூறாவளி தூக்கியெறிந்தமைக்காக, கதிரைப் பல்லக்குக் காவிகள் நால்வருக்கும், திருக்கை வாற்சவுக்கால் அலுக்கோசுகள் ஆறாறு அடிகள், தசை பிரிய வழங்கினார்கள்.

பண்ணைக் கடலில், கோட்டைக்கு எதிரில் நங்கூரமிட்டிருந்த மரக்கலங்கள் மூன்று ஒன்றுடன் ஒன்று மோதி நொருங்குண்டன. கடல் நீர் மட்டம் உயர்ந்து கோட்டை அகழிக்குள் வேகமாக புகுந்தது. அதனால் தொங்குபாலம் உயர்த்தப்பட்டது. கோட்டைக்குள்ளிருந்த தேவாலயத்தின் பீலி ஓடுகள் இலைச் சருகுகளாகப் பறந்து போயின. பாசறைகளின் கூரைகளும், அதிகாரிகளின் மாளிகைக் கூரைகளும் சிதைந்துபோயின. சூறாவளியின் தாக்கம் மறுநாளும், 5 நவம்பர் 1669 இருந்தது.

### 28 செப்ரெம்பர் 1795

யாழ்ப்பாணக் கோட்டை என்றுமில்லாத பரபரப்பிற்குள்ளாகியது. 'ஆங்கிலேயரின் படைக் கப்பல்கள் பருத்தித்துறையில் நங்கூரமிட்டு தரையிறங்கி அணி வகுத்துவிட்டன' என்ற செய்தி கோட்டைக்குள்ளும் சீதாரியிலும் வாழ்ந்த ஒல்லாந்தப் பறங்கிகளுக்குப் பேரிடியாக இறங்கியது. திருக்கோணமலைக் கோட்டையைக் கைப்பற்றிய ஆங்கிலேயப்படை பருத்தித்துறையில் வந்திறங்கியது. ஸ்ருவார்ட் என்பானின் தலைமையில் வந்திறங்கிய படையில் ஒரு பகுதியினர் பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணக் கோட்டை நோக்கியும், ஒரு பகுதியினர் கப்பல் மூலம் ஊர்காவற்றுறையூடாகக் கடனீரேரிக்குள்ளும் புகுந்தனர்.

யாழ்ப்பாணக் கோட்டை மீண்டும் முற்றுகைக்குள்ளானது. ஆயிரக்கணக்கான ஆங்கிலேயரின் படை முன்பு, நூற்றுக்கணக்கான ஒல்லாந்தர் படை எம்மட்டு? ஒல்லாந்தர் கோட்டையை ஆங்கிலேயரிடம் யுத்தமின்றியே கையளித்துவிட்டு வெளியேற நேர்ந்தது.

கோட்டைக்குள் ஆங்கிலேயர் குடி புகுந்தனர்.

(தொடரும்)

படிப்பகம்